**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.395/2024**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அந்தோணி சபரிமுத்து | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | அற்புதம் | தொழில் | : | உதவி ஆய்வாளர் (பணி ஓய்வு) |
| கிராமம் | : | கல்லிடைக்குறிச்சி | வயது | : | 64 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 23rd, 2026.

**(1ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கல்லிடைக்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 2009ம் வருடம் சுரண்டை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். எதிரியை எனக்கு தெரியும். 24.02.2009 அன்று மாலை 18.00 மணிக்கு பங்களாச்சுரண்டை பேரன்புருக் மேல்நிலைப்பள்ளியின் முன்பு நானும், என்னுடன் தலைமைக்காவலர் லெட்சுமணன் மற்றும் காவலர்கள் கோபி, பாலமுருகன் ஆகியோர் சகிதம் வாகனத்தணிக்கை செய்து கொண்டிருக்கும் போது பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட பங்களாச்சுரண்டை வாட்டர்டேங்க் தெருவைச் சேர்ந்த தேவராஜ் என்பவரின் மகன் எதிரி அருள்ராஜ் என்ற கோழி அருள் என்பவர் ஓட்டி வந்த TN-58-B-5440 என்ற எண் பதிவெண் கொண்ட சுசுகி வாகனத்தை தணிக்கை செய்தபோது அவர் எங்களைப் பார்த்து "தேவடியா மக்களே, சென்னையில வக்கீலும், போலீசும்

சண்டை போட்டு கொண்டிருக்கு, இங்கு எங்கள் அண்ணன் கராத்தே செல்வினுக்கு நினைவு நாள் வருது, நீங்க நாட்டை திருத்துற மாதிரி வண்டியை செக் பண்ணிகிட்டு இருக்கீங்க," என்று சொன்னவரை நான் எச்சரித்து எதிரியின் அருகில் போன போது, எதிரி அவரது வண்டியின் டேங்க் கவரில் இருந்து ஒரு நாட்டு வெடிகுண்டை எடுத்து "இத்தோடு செத்து தொலை" என்று சொல்லி என்னை நோக்கி எறியவும், நான் சுதாரித்து கொண்டு சற்று விலகி விட்டேன். அதனால் அந்த குண்டு ரோட்டில் விழுந்து வெடித்து சிதறியது.

பின்னர் நாங்கள் அனைவரும் சேர்ந்து எதிரியை பிடிக்க அருகில் சென்றவுடன் எதிரி மீண்டும் அவரது வண்டியின் டேங்க் கவரிலிருந்து மீண்டும் ஒரு நாட்டு வெடிகுண்டையும், சட்டையின் பின்னால் தொங்கப்போட்டிருந்த அரிவாளையும் கையில் எடுத்துக்கொண்டு நாலாபுறமும் சுற்றிக்கொண்டு "இங்கு வந்தால் வெட்டி கொன்று விடுவேன்" என்று சொன்னார். அப்போது போக்குவரத்து நின்றது, பொதுமக்களின் வாழ்க்கை ஸ்தம்பித்தது. கடைக்காரர்கள் தங்களது உடைமைகளை பாதுகாக்க வேண்டி கடைகளை மூடி விட்டு ஓடி விட்டார்கள். அதன் பின்னர் நான் எனது துப்பாக்கி முனையில் சிறு பலத்தை பயன்படுத்தி எதிரியை பிடிக்க முயன்றபோது, என்னுடன் இருந்த காவலர் கோபி என்பவருக்கும் லேசாக காயம் ஏற்பட்டது.

நாங்கள் சிறு பலத்தை பயன்படுத்தியதால் எதிரிக்கும் சிறு காயம் ஏற்பட்டது. நாங்கள் போலீசார்கள் சேர்ந்து எதிரியை பிடித்து அதன் பின்னர் 19.15 மணிக்கு சுரண்டை காவல்நிலையம் கொண்டு வந்து எதிரியையும், அவர் கொண்டு வந்த நாட்டு வெடிகுண்டு ஒன்று, அவர் ஓட்டி வந்த பைக், அரிவாள் ஒன்றையும் நிலையம் கொண்டு வந்து தனி அறிக்கையை காவல்

ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் தனி அறிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த தனி அறிக்கை அ.சா.ஆ.1 ஆகும். இது சம்பந்தாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>4 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

சம்பவநாள் என்னுடைய பணி ரோல் காலில் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த விபரம் என்னுடைய தனிப்பட்ட டைரியிலும், காவல்நிலைய பொதுநாட்குறிப்பிலும் துலங்கும் என்றால் சரிதான். அந்த ஆவணங்களை நான் ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை. சம்பவ நாள் எத்தனை வாகனங்களை சோதனை செய்தோம் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். சாட்சி காவலர் கோபி சம்பவநாளில் எங்களுடைய காவல்நிலையத்தில் இல்லை என்றாலும், அவர் ஊத்துமலை காவல்நிலையத்தில் பணிபுரிந்தார் என்றாலும் சரியல்ல.

1 வது எதிரியை நான் சம்பவயிடத்தில் கைது செய்யவில்லை. அவரை விசாரணைக்காக காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தேன். அங்கு வைத்து ஆய்வாளர் கைது செய்தார். 1 வது எதிரியிடமிருந்து கைப்பற்றிய பொருட்களை ஒரு மெமோ தயார் செய்து அவரிடம் கையெழுத்து பெற வேண்டும் என்றால் சரிதான். நான் அவ்வாறு மெமோ தயார் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவயிடத்தில் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

சம்பவயிடம் போக்குவரத்து நிறைந்த பிரதாண சாலை என்றால் சரிதான். அது வீ.கே.புதூர் - சுரண்டை ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். சாலையின் மேற்குபுறம் பள்ளிக்கூடமும், கிழக்குபுறம் வரிசையாக கடைகளும் உள்ளது என்றால் சரிதான். வாகனத்தை நிறுத்தி நாங்கள்

சோதனை செய்தோம் என்றால் சரிதான். ரோட்டின் எந்த திசையில் வெடிகுண்டு வெடித்தது என்றால் மேல்நிலைப்பள்ளியின் முன்னால் வெடிகுண்டு வெடித்தது. வாசல் பகுதிக்கு அருகே வெடித்தது. வெடி வெடித்தவுடன் அந்த இடத்தில் மக்கள் கூட்டம் கூடினார்கள் என்றால் அந்த இடத்திலிருந்து மக்கள் பயந்து ஓடினார்கள்.

துப்பாக்கியை நான் கையில் எடுத்து செல்லும் போது காவல்நிலைய பதிவேட்டில் எழுதி எடுத்து செல்வோம் என்றால் சரிதான். நான் அதற்கான ஆவணங்கள் எதையும் ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை. காவலர் கோபி மருத்துவமனை செல்லவில்லை என்றால் சரிதான். தனி அறிக்கை நான் காவல்நிலையத்தில் வைத்து எழுதினேன். முதல்தகவல்அறிக்கை ஜெயசங்கர் என்ற ரைட்டர் பதிவு செய்தார். என்னுடன் இருந்த போலீசாருடன் சேர்ந்து தான் நான் காவல்நிலையம் திரும்ப சென்றேன். தனிஅறிக்கையில் அவர்கள் சாட்சி கையெழுத்து செய்யவில்லை.

1வது எதிரியை ஏற்கனவே ஒரு நாளைக்கு முன்னால் சுரண்டை போலீசார் அழைத்து சென்று செல்வின் நினைவு நாளில் பிரச்சனை ஏற்படும் என்பதினால், முன் எச்சரிக்கை நடவடிக்கை செய்து வைத்திருந்தார்கள் என்றாலும், பின்னர் பின்யோசனையின் பேரில் இவ்வாறு ஒரு பொய் வழக்கு போடப்பட்டது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கு பின்னர் 1வது எதிரி மீது குண்டர் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரிதான். குண்டர் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காக இந்த வழக்கு அடிப்படை வழக்காக போடப்பட்டது என்றால் சரியல்ல.

நான் சம்பவநாள் சம்பவயிடத்தில் வாகன சோதனையில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வெடிபொருட்கள்

கையாளுவது குறித்து தனிபயிற்சி இல்லை. நான் வெடி வெடித்த தடயங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. நான் வெடிக்காத குண்டை கையில் தான் எடுத்து சென்றேன். எதிரியின் பைக்கை சம்பவயிடத்தில் வைத்து கைப்பற்றியதாக கூறியது பொய் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

(4ம் எதிரியின் குறுக்கு விசாரணையானது, இதர எதிரிகளின் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.)

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.25 15:34:41 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.395/2024**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோபி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | தங்கராஜ் | தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | சுரண்டை | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 23rd, 2026.

**(1ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது குற்றாலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2009ம் வருடம் நான் ஊத்துமலை காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வந்தேன். 1ம் எதிரியை எனக்கு தெரியும். 24.02.2009 அன்று மாலை 06.00 மணிக்கு பங்களாச்சுரண்டை பேரன்புருக் மேல்நிலைப்பள்ளியின் முன்பு உதவி ஆய்வாளர் அந்தோணிசபரிமுத்துவுடன், நானும், என்னுடன் தலைமைக்காவலர் லெட்சுமணன் மற்றும் காவலர் பாலமுருகன் ஆகியோர் சகிதம் வாகனத்தணிக்கை செய்து கொண்டிருக்கும் போது அந்த வழியாக ஒரு இருசக்கர வாகனம் வந்தது. அந்தவாகனம் TN-58 என்ற எண் பதிவெண் கொண்ட சுசுகி வாகனம். அதை மறித்து நிறுத்திய போது எதிரி எங்களிடம்

"தேவடியா மக்களே, எங்களை எதற்கு நிப்பாட்டுதீங்க உங்களை வெட்டாமல் விடமாட்டேன். சென்னையில வக்கீலும், போலீசும் சண்டை

போட்டு கொண்டிருக்கு, இங்கு எங்கள் அண்ணன் கராத்தே செல்வினுக்கு நினைவு நாள் வருது, அன்று நான் பார்த்து கொள்கிறேன்," என்று சொன்னார். அப்போது உதவி ஆய்வாளர் எதிரியிடம் "நீ யாருப்பா எதற்காக கோபப்படுகிறாய், உன் பேரைச் சொல்லு, ஊர் என்ன" என்று கேட்டார். அப்போது எதிரி அதற்கு பதில் சொல்ல மறுத்தார்.

பின்னர் மீண்டும் உதவி ஆய்வாளர் எதிரியின் பெயர், விலாசத்தை கேட்டார். அப்போதும் எதிரி சொல்ல மறுத்தார். நாங்கள் பக்கத்தில் உள்ளவர்களிடம் விசாரித்தபோது அவர் பெயர் தேவராஜ் மகன் அருள் என்ற கோழிஅருள் என்று சொன்னார்கள். உதவி ஆய்வாளர் பேசிக்கொண்டிருக்கும் போதே எதிரி வேகமாக வண்டியை விட்டு கீழே இறங்கி பாம் ஒன்றை கையில் வைத்து நாங்கள் நிற்பதை பார்த்து எங்களை நோக்கி எறிந்தார். நாங்கள் உடனே சுற்றி வளைத்து என்ன, எதற்கு என்று கேட்டோம். அதற்கு எதிரி அரிவாளை எடுத்து வெட்டுவதற்கு வந்தார். அப்போது எனக்கு கையில் லேசான சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. அதன் பின்னர் எதிரியை ரவுண்ட்அப் செய்து பிடித்து காவல்நிலையம் கொண்டு சென்றோம். 19.00 மணிக்கு எதிரியை காவல்நிலையம் கொண்டு சென்றோம். அதன் பின்னர் வழக்கு பதிவு செய்தார்கள். என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>4 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

சம்பவநாள் என்னுடைய பணி ரோல் காலில் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த விபரம் என்னுடைய தனிப்பட்ட டைரியிலும், காவல்நிலைய பொதுநாட்குறிப்பிலும் துலங்கும் என்றால் சரிதான். அந்த ஆவணங்களை நான் ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ நாள் எத்தனை வாகனங்களை சோதனை செய்தோம் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். நான் சம்பவநாளில் ஊத்துமலை

காவல்நிலையத்தில் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் ஆய்வாளர் விசாரணையிலும் சொல்லியுள்ளேன்.

சம்பவயிடம் போக்குவரத்து நிறைந்த பிரதாண சாலை என்றால் சரிதான். அது வீ.கே.புதூர் - சுரண்டை ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். சாலையின் மேற்குபுறம் பள்ளிக்கூடமும், கிழக்குபுறம் வரிசையாக கடைகளும் உள்ளது என்றால் சரிதான். வாகனத்தை நிறுத்தி நாங்கள் சோதனை செய்தோம் என்றால் சரிதான். ரோட்டின் எந்த திசையில் வெடிகுண்டு வெடித்தது என்றால் மேல்நிலைப்பள்ளியின் முன்னால் வெடிகுண்டு வெடித்தது. வெடி வெடித்தவுடன் சுற்றி நின்ற மக்கள் ஓடினார்கள்.

1வது எதிரியை ஏற்கனவே ஒரு நாளைக்கு முன்னால் சுரண்டை போலீசார் அழைத்து சென்று செல்வின் நினைவு நாளில் பிரச்சனை ஏற்படும் என்பதினால், முன் எச்சரிக்கை நடவடிக்கை செய்து வைத்திருந்தார்கள் என்றாலும், பின்னர் பின்யோசனையின் பேரில் இவ்வாறு ஒரு பொய் வழக்கு போடப்பட்டது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கு பின்னர் 1வது எதிரி மீது குண்டர் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரிதான். குண்டர் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காக இந்த வழக்கு அடிப்படை வழக்காக போடப்பட்டது என்றால் சரியல்ல.

நான் சம்பவநாள் சம்பவயிடத்தில் வாகன சோதனையில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வெடிபொருட்கள் கையாளுவது குறித்து தனிபயிற்சி இல்லை. வெடிக்காத குண்டை யார் எடுத்து சென்றார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. எதிரியின் பைக்கை சம்பவயிடத்தில் வைத்து கைப்பற்றியதாக கூறியது பொய் என்றால்

சரியல்ல. நான் சம்பவநாள் அ.சா.1 டன் பணியில் இருக்கவில்லை என்றாலும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

(4ம் எதிரியின் குறுக்கு விசாரணையானது, இதர எதிரிகளின் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.)

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.25 15:34:55 +0530